உ



சற்குரு பா மாலை.

ஸ்ரீ செல்லப்ப ஞானாசாரிய சுவாமிகளது

பாதசேகரருள் ஒருவரான

கா. செ. சிவானந்த சுவாமிகளால்

பாடப்பெற்றது.

உ

காளையார்கோவில் வேதாந்த மடாலயம்

ஆதி குருமூர்த்தி

ஸ்ரீ செல்லப்ப ஞானாசாரிய சுவாமிகளது

பாதசேகரருள் ஒருவரான

கா. செ. சிவானந்த சுவாமிகளால்

பாடப்பெற்ற

சற்குரு பாமாலை

கா. செ. முத்தைய சுவாமிகளால்

அன்பர்கள் பொருளுதவியால்

கரூர் வடிவேல் பிரஸில் பதிப்பிக்கப் பெற்று

குரு பூஜையின்போது வினியோகிக்கப்பட்டது.

1955

உ

சற்குரு பா மாலை.

இஃது ஸ்ரீமத் அடியார்க்கடியர் சுவாமிகளின் அடியனாலியற்றியது

சாற்றுக்கவிகள்

அறுசீர் விருத்தம்.

நல்லப்ப மழுதென்ன வந்தியின்பா லேற்றபிரான் ஞாலமுய்யச்
செல்லப்ப சற்குருவா யவதரித்துப் பவமார்க்கந் தெரியாவண்ணம்
கல்லப்ப மெய்யுணர்த்து மதீதனிலை யருணிதியே கருணைவேந்தாஞ்
சொல்லப்ப ரென்றடிய ரெஞ்ஞான்றுந் தொழுதேத்துந் துரியவாழ்வே.

இஞ்ஞானப் பெருந்தகைக்கு எற்றஅடி யவராகி யிறும்பூ தெய்த
மெஞ்ஞான முழுதுணர்ந்த சிவானந்த சுவாமிகளின் விவேகா னந்தச்
சுஞ்ஞானத் தாலருளுஞ் சற்குருபா மாலையினைத் துதிப்போர் யார்க்கும்
அஞ்ஞான வவத்தையகன் றானந்த மாந்துரிய வதீத மாமே.

காப்பு

கணபதி வணக்கம்

மூவர்கள் பாடல் பெற்ற முதன்மைசேர் கானப் பேரில்
தேவர்கள் தேவன் றானே தேசிகனாக வந்தான்
பாவல ரவற்குச் சூட்டப் பாலகன் விருப்ப முற்றேன்
காவல தாக வேண்டும் கஜமுகன் கழல்கள் தானே.

காளையார் கோவில் பஞ்சமூர்த்தி துதி

வணங்கிடு மடியார்க் கருள்புரி ஞான வாரண முகவனை வணங்கார்
வணங்கெட வடிவேல் விடுத்தமெய்க் குகனை வார்சடைக் காளியீஸ்வரனை
வணங்கிடு மயன்மா லவர்க்கருள் புரியும் வல்லியாஞ் சுவர்ணநா யகியை
வணங்கிரு பையதாஞ் செல்லப்ப ஞான வள்ளலை வணங்கியே துதிப்பாம் 1

வானவர் முனிவர் மானவர் பரவும் வாரண முகமதார் தேவை
வானவர் பகைவ ரானவர் மடிய வடித்தவேல் விடுத்திடு குகனை
வானதி சூடுங் காளியெம் பரனை வார்குழல் சுவர்ணநா யகியை
வானவர் பரவும் ஞான செல்லப்ப வள்ளலை வணங்கி வாழ்த்திடுவாம் 2

குருவின் சீர்பாத வல்லபம்.

நாயினுங் கடைய தீயனை ராம நாயகனூரினுக் கனுப்பித்
தாயினுஞ் சாலப் பரிந்தமுதளித்துத் தனிமருதூரினில் விடுத்து
மாயிரு ளகலத் திருநல்லூர் வந்து வாவென வலிந்தழைத் தாண்டு
சேயெனைக் கானப் பேர்தனிற் காத்த செல்லப்ப குரவர்சீர் பதமே 3

குரு ஸ்துதி

அக்கர வடிவே யருமறைப் பொருளே யடியவர்க்கருள்புரி யருளே
துக்காங் குறியில் குறியதாய் நின்ற சோதியே சோதிமா வனத்திற்
புக்கிருந்தடியார்க் கருளுமெய் யின்பப் போதமே போதமில் லடியேன்
சிக்கறுத் தாண்ட செல்லப்ப ஞான தேசிகச் செல்வமே சிவமே 4

வேறு

ஆண்ட குருவே மறைமுடிவே யடியார்க் கருளு மாரமிர்தே
தூண்டல் செய்யா மணிவிளக்கே சோதி வனத்தி லுறைசிவமே
காண்டற் கினிய திருவுருவே கண்ணின் மணியே யுன்னடிமை 4
பூண்டு கொண்டேன் செல்லப்பாவுன் பொற்றுள் போற்றி போற்றியவே 5

வேறு

இன்பிருப் பொளியாய் இலங்கிய பொருளே யென்றுமெவ் விடத்தினுந் தோன்றுந்
துன்பிருப் பில்லாத் தோற்றர வற்ற சொல்லொணுப் பொருளெங்ஙன் றேன்று
மன்பிருந் தனிச முசாவிநீ யுணர்தி யனுபவ மாகவென் றுரைத்துப்
புன்பிறப் பறுத்த செல்லப்ப தேவன் பொன்னடி முடிமிசை புனைவாம் 6

ஈறொடு தோற்ற மின்றியே யிலங்கி யென்கணி லுறைந்திடு மிறையை
யாறொடு கொன்றை யனல்விழி மழுமா னகன்சடை யானன முமையோர்

கூறதை நீக்கிக் கூறுமெய் ஞானக் கோலமாய்க் கொடியவன் பிறப்பை
நீறுசெய் தளித்த செல்லப்ப குருவை நிதநிதம் பணிந்திட ரொழிப்
பாம் 7

உத்தம குருவே வுயர்மறைப் பொருளே வுப்பரு முணர்வதற் கரிய
சத்திய ஞான சுக வடிவான சாந்தமே சாந்தமெய் யடியார்
சித்தமே கோவி லாக்கொண்டு வாழுந் தேசிகா செல்லப்ப மணியே
பத்தியிலடியேன் புத்தியி லுகந்துன் பதமதை யளிப்பதென் றெனக்கே 8

வேறு

ஊனக் கண்கொண்டு வொன்றையு நோக்கனீ
ஞானக் கண்கொண்டு நன்பொரு ளுடென்றன்
வானக் கண்ணுனுறைவார்க்கு மறியொணு
ஞானக் கண்ணுனுறை செல்லப்ப நாதனே 9

என்னை நோக்கி யிருந்தறி கின்றிலை
யென்னை நோக்கி யிருந்தழி கின்றனை
யென்னை நோக்கொன்று மின்பம தாகவென்
றென்னை நோக்கின னெந்தை செல்லப்பனே 10

ஏத மற்றுவி ரோதம தாகிய
போத முற்றுப சாந்தம தாயிரு
காத லற்றிடு வென்றுரை செல்லப்ப
ஞாத நற்கழ லுடொழு மேத்துவாம் 11

வேறு

ஐயனே மறைகள் தேடு மத்தனே யறிவாஞ் சோதி
மெய்யனே மெய்யி லாத வினையினேன் றனையு மாண்ட
செய்யனே செய்ய ஞான தேசிகா செல்லப்பா வுன்
பொய்யில் சீர் பதங்களென்மேற் புனைந்தருள் போற்றி போற்றி 12

ஒளிமதி முடித்த வேணி யொருவனே கருணை கூர்ந்து
அளியதே யுருவாக் கொண்டு அருமறை முடிவை யோதி
களிகொளுங் கானப் பேரிற் காட்சிதந் தெனை யாட்கொண்டு
வெளியதே யுருவாச் செய்த வியன்குரு சரணம் போற்றி 13

வேறு

ஓரில்வே தாந்த நூலுரைப் பொருளே யுயர்மறை யாகமப் பொருளாம்
பாரில் வேறாகப் பகருநூற் பொருள்கள் பாகமில் சித்தரைக் குறித்தாந்
தேரிநீ யிதனை யறிதியென் றுரைத்த செல்லப்ப ஞானதே சிகரின்
சீரிய பதத்தை நினைந்துநைந் துருகித் தினந்தினம் பணிந்திட ரொழிப்
[பாம் 14

ஔவிய முடைய வகமதி லான்மா வழுக்குறு வாடியில் முகம்போல்
செவ்விதிற் றோன்றாப் போகத்தி னிச்சை சிந்தனை வாதனை யிவற்றாற்
கௌவுறு பொருளிற் பற்றுதனீக்க லாகிய வனைத்தையுங் கழன்றாற்
செவ்விதிற் றோன்று மென்றுரை செய்த தேசிகன் றிருவடி பணிவாம் 15

வேறு

கண்டே னெனதுரு வாகிய சோதியைக் காசினியோர்
கொண்டாடு கின்ற திருக்கானப்பேரிற் குருவடிவாய்
விண்டே னெனதுட லாதிய வானவி யாதியெல்லாம்
உண்டேன் பிரம சுகமதை யானு முவந்தனனே. 16

ஙப்போல் வளையென்று சொல்லிய செல்வியின் ஞானமதைத்
தப்பா துணர்ந்தொரு தானு யிருந் தொளிர் தன்மையினை
யெப்போது மெல்லாமெ னுள்ளே யிருந்த வியல்பையொரு
செப்பா றுணர்த்தினன் செல்லப்ப ஞான சிகாமணியே. 17

சற்று யினுமொரு சிந்தனை வாதனை சார்ந்த தென்னிற்
பற்று மதுவது வேபிறப்பாந் துன்பம் பாழ்மனமே
எற்று யினுமொரு சிந்தனை சார்வதற் கெண்ணுவையேற்
பற்று மெனவிறை செல்லப்ப தேவன் பதம்பணியே 18

ஞயமா னதுபுனை கல்வியு ஞானமு நற்றவமும்
பயமா னதுபுனை சித்தியு முத்தியும் பார்தனிலே
சுயமா யருள்தருஞ் செல்லப்ப தேவன்று ணையடியை
நயமா னதுபுனை பத்தியி னித்திய நாடிடுவாம். 19

டமருக மான்மழு வேந்திய சங்கரன் ருரணியில்
லமருக வியுக மாகிய போதிலுஞ் மஞ்ஞனவன்
முமரம ழித்தருள் சற்குரு செல்லப்ப மூர்த்தியதா
யமரவி ருந்தவ னம்போ ருகமுடி சூடுவனே 20

வேறு

இணங்குமெய்ஞ் ஞான வடிவமா யிலகி யென்றனை யாண்டசற் குரவன்
வணங்குமெய் யடியார்க் கருள்தரு புனிதன் வானவர்க் கறியொணா முதல்வன்
சுணங்களிற் கடைய னாகிய வெனையுந் தொண்டருட் கூட்டிய துறவோன்
வணங்குறு ஞான செல்லப்ப தேவன் மலரடி முடிமிசை வைப்பாம். 21

வேறு

தந்தையாய்த் தாயு மாகிச் சார்ந்திடுங் கதியு மாகி
யந்த மத்தியமோ டாதி யாகிடா வின்ப மாகி
எந்தமா ருயிரு மாகி யிசைந்த செல்லப்ப ஞானச்
சுந்தர குரவன் பாத துணைமலர் முடிமேற் கொள்வாம் 22

வேறு

நறைமலர் கமழு நந்தன வனமு நாயகன் கோவிலு மடமும்
மறைபயி லிடமு நிறைநிறை மருவ மாண்பமை கானப்பேர் நகரில்
உறைதரு மடியா ருறுதவ மனைத்து மோருரு வெடுத்தவர் பவமாஞ்
சிறைதவிர்த் தாண்ட செல்லப்ப ஞான தேசிகன் திருவடி பணிவாம். 23

வேறு

பந்த மாமிருள் பற்றற நீங்கிடச்
சிந்தை யாரச் சிவமது தோன்றிடத்
தந்தை செல்லப்பன் றாளினை தந்ததா
லந்த நற்கழ லன்பொடு போற்றுவாம் 24

வேறு

மல்லலம் பொழில்சூழ் கானப் பேர்தனில் மன்னி வாழுஞ்
செல்லப்ப தேவ னென்னுந் தேசிகன் பாதப் போதை
யல்லுநற் பகலு மாறு தகத்தினுஞ் சிரத்துஞ் சூடும்
நல்லவர் பாதம் நாளு நாடிநின் றிறைஞ்சு வோமே. 25

வேறு

இயல்பலா தனவே செய்துபுன் பிறப்பு மிறப்புமே யெய்துவேன் றன்னை
யியல்பதாம் ஞானச் சுவைநிறைந் தகத்தும் புறத்துமே யின்புருவான
யியல்பினை யறிந்தே காந்தமே நண்ணு மிரும்பெருந் தவரொடுஞ்
சேர்ந்து
யியல்பதாம் பதத்தி லிருக்கவைத் தாண்ட வெழிற்குரு சரணமே
போற்றி. 26

அரவா பரணத் திருமார்பு மனல்சேர்விழியு மழுமானும்
கரமோர் நான்குங் கறைமிடறுங் கரந்து கருணைத் திருவுருவாய்
வரமா ரயன்மால் வானவர்கள் வணங்கு ஞானப்பேர் தனில்வாழ்
வரதா ஞான மணிவிளக்கே வாழி வாழி நீடூழி. 27

வேறு

லம்பிகை யாதி யோகங்கள் செய்து யானுடற் றிறமைபெற் றில்லேன்
அம்பிகை யாதி தேவுபா சனையா லசைமன வொருமையு மில்லேன்
தம்பமா மூட மதியெனை யாளத் தகுவது முன்பர மன்றோ
உம்பரும் பரவுஞ் சோதிமா வனத்தி லுறைந்தருள் சற்குரு மணியே. 28

வேறு

வள்ள லென்றுரை செய்பவர் யாரெனின்
வெள்ள ஞானம் விளக்குவோ ராதலால்
தெள்ளு ஞானச் சுடர்செல்லப் பேசனே
வள்ள லென்றுள்ளி வாழ்த்தி வணங்குவாம். 29

அழக லாதன செய்துழல் கின்றனன்
அழகி தான திதுவென் றறிகிலேன்
அழகி தென்றுணர் வித்தெனை யாள்வையோ
அழகர் சூழ்காளை யார்கோவி லாண்டவா. 30

இளமை யுமனை யாதிய வேடணை
வளமை யுந்துறந் தன்னை வணங்குவார்
அளவை யுக்திக ளாலறிந் தாறுவார்
அளவில் சோதி வனத்துறை யாண்டவா. 31

அறம்பொ ருளின்பம் வீடென் றருமறை
அறைவ துன்ற னடியிணை யாதலால்
நறைம லர்ப்பதம் நாடிட நல்குவாய்
அறைபு னற்றிருக் கானப்பே ராண்டவா. 32

அனந்த னானும் அருமறை யானுமிம்
மனந்த னாலும் மதிக்கொணா வான்பொருள்
எனந்த மான வியல்பளித் தாட்கொளச்
சனந்த னாற்புகழ் சற்குரு வானதே. 33

வேறு

சத்திய ஞானா னந்த சற்குரு சரணந் தன்னில்
பத்தியாய்ப் பாடு மிந்தப் பாக்களைப் பாடுவோர்கள்
சித்தியும் புத்தி யோடு செல்வமும் புகழும் பெற்று
நித்திய வாழ்வும் பெற்று நிரந்தரம் வாழ்கு வாரே. 34

வேறு

தீனதயா பரசிவமே யடியா ருய்யச் செல்லப்ப
சற்குருவா யவதரித்துத்
தானமிகுங் காளை யார்கோவிலின்கண் சாசுவத
ஆனந்த சமாதி யுற்று
ஞானரவி சாந்தமதி கருணைமேக சற்பரமா
னந்தசமுத் திரமா[illegible] மோன
வானமெனச் சுவானுபவ மலையாய் மன்னும்
வள்ளல்நின தடிமலர்கள் வாழி வாழி. 35

நல்லப்ப/னன்னைகுரு/நாதனருட் குருவாஞ்
செல்லப்ப/வள்ளலடி/தேர். 36